பெருநகர சென்னை மாநகராட்சி
செய்தி வெளியீடு

செ.வெ.எண். 172 நாள்: 17.11.2017

**பெருநகர சென்னை மாநகராட்சியில் கூவம் ஆற்றுப்படுகையில் உள்ள ஆக்கிரமிப்பு வீடுகள் அகற்றும் பணி நடைபெற்றது என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

பெருநகர சென்னை மாநகராட்சியில் கூவம் ஆற்றுப்படுகையில் உள்ள 387 ஆக்கிரமிப்பு வீடுகள் அகற்றும் பணி இன்று (17.11.2017) நடைபெற்றது என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

சென்னை நதிகள் பாதுகாப்பு அறக்கட்டளை ஆற்றுப்படுக்கையில் விரிவான ஆய்வு மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பித்தன் அடிப்படையில், நீர்வழித்தடங்களான கூவம் மற்றும் அடையாறு பகுதிகளில் மறுசீரமைப்பு செய்து பழைய நிலைக்கு கொண்டு வருவதற்காகவும், வெள்ளம் பாதிக்கும் பகுதிகளில் குடியிருப்பவர்களுக்கும், நிலையில்லாத கட்டுமான குடியிருப்புகளில் இருக்கும் பொதுமக்களுக்கு தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டப்பட்டு ஒதுக்கீடு செய்யப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில், கூவம் மற்றும் அடையாறு ஆற்றுப்படுகையில் உள்ள ஆக்கிரமிப்பு வீடுகள் கணக்கிடப்பட்டு, இதுவரை 5,383 வீடுகள் அகற்றப்பட்டு, தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தால் கட்டப்பட்ட வீடுகளுக்கு மறுகுடியமர்வு செய்யப்பட்டனர்.

அதன் தொடர்ச்சியாக, இன்று அண்ணாநகர் மண்டலம், வார்டு–100, அரும்பாக்கம் முத்துமாரியம்மன் நகர், கூவம் ஆற்றுப்படுகையில் 387 ஆக்கிரமிப்பு வீடுகள் கண்டறியப்பட்டு அகற்றும் பணி மேற்கொள்ளப்படுகிறது. இந்தக் குடும்பங்களுக்கு தகுந்த மாற்று ஏற்பாடாக 281 குடும்பங்களுக்கு நாவலூரில் உள்ள தமிழ்நாடு குடிசைமாற்று வாரியத்தின் அடுக்குமாடி குடியிருப்பு வீடுகளும், 156 குடும்பங்களுக்கு திருவொற்றியூரில் உள்ள தமிழ்நாடு குடிசைமாற்று வாரியத்தின் அடுக்குமாடி குடியிருப்பு வீடுகளும் வழங்கப்பட்டுள்ளது.

ஒரு வாகனத்திற்கு 4 நபர்கள் வீதம் 150 பணியாளர்கள் மற்றும் 25 லாரிகளும், இந்தக் குடும்பங்களுக்கு 3 நாட்களுக்கு தேவையான உணவு வசதியும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இப்பகுதியில் இருந்து பள்ளி மாணவர்கள், கல்லூரி மாணவர்கள் அந்தந்த பகுதிகளில் உள்ள

பள்ளி, கல்லூரிகளுக்கு மாற்ற தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவர்களின் வாக்காளர் அடையாள அட்டை, குடும்ப அட்டை ஆகியவற்றில் முகவரி மாற்றம் செய்யவும், இப்பணியின் போது ஏதேனும் சிகிச்சை தேவைப்படும் என்பதனை கருத்தில் கொண்டு மருத்துவ முகாமும் நடைபெற்று வருகிறது.

பொதுமக்களின் ஒத்துழைப்போடு இப்பணியை மேற்கொள்ள தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. அதனடிப்படையில் சம்பந்தப்பட்ட பகுதியில் கலந்தாய்வு மேற்கொள்ளப்பட்டு அப்பகுதி பொதுமக்களின் ஒத்துழைப்போடு இப்பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கணக்கெடுப்பின் போது விடுபட்டவர்களை கண்டறிவதற்காக தன்னார்வ தொண்டு நிறுவனம் மூலம் விண்ணப்பங்கள் பெறும் பணி நடைபெற்று வருகிறது. விண்ணப்பங்களின் ஆய்வுக்குப்பின் தகுதி வாய்ந்தவர்களுக்கு வீடுகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். ஆக்கிரமிப்பு அகற்றும் பணியானது காவல்துறை, வருவாய்துறை, கல்வித்துறை, சுகாதாரத்துறை போன்ற துறைகளின் ஒத்துழைப்புடன் நடைபெற்று வருகிறது என தெரிவித்துள்ளார்.

இப்பணியினை துணை ஆணையாளர் (பணிகள்) திரு.எம்.கோவிந்த ராவ், இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டார். உடன் மத்திய வட்டார துணை ஆணையாளர் டாக்டர்.சுபோத் குமார், இ.ஆ.ப., அண்ணாநகர் காவல்துறை துணை ஆணையாளர் திரு.சுதாகர், இ.கா.ப., மண்டல அலுவலர் திரு.எம்.பரந்தாமன் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**